பெற்றுக்கொள்ளலாம். நியமனத் தாள்கள் 11–9–78 திங்கட் கிழமை மாலை 5 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 12–9–78 செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அதாவது நான்கு இடங்களுக்கு மேற்படுமாயின் 14–9–78 வியாழக்கிழமை பகல் 10 மணிக்கும் 12 மணிக்கும் இடையே, சென்னை கோட்டையில் இருக்கும் பேரவைக் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

(5) அறிக்கை அளித்தல்.

விதி 82-ஏ இன் கீழ் கூட்டுறவுத் துறை அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, 4–3–1978 அன்று உடுக்குறியிட்ட வினா எண். 385 விடையளிக்கையில், மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சந்திரன் கேட்ட துணை வினாவிற்கு, முன்னாள், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் "தலைவரவர்களே, கூட்டுறவுச் சட்டத் திருத்தங்களை ஆராய்வதற்கும், அவற்றில் தேவையான மாற்றங்களைச் செய்வதற்கும் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. பழனி என்பவர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்படவில்லை. பழனி என்பவர் அதிகாரியாகத்தான் அந்தக் குழுவிலே பணியாற்றி வருகிறார்" என்று பதிலளித்தார். அதனை "கூட்டுறவுச் சட்ட திருத்தங்களை ஆராய்வதற்கும் அவற்றில், தேவையான மாற்றங்களைச் செய்வதற்கும் தனி ஊழியர்கள் அமர்த்தப்பட்டனர். திரு. பழனி என்பவர் தலைமையில் ஒரு நபர் குழு அமைக்கப்படவில்லை. திரு. பழனி என்பவர் அரசு அனுமதித்த பல்வேறு பதவியாளர்களில் ஒரு இணைப் பதிவாளரின் பதவியில் அமர்த்தப்பட்டார்" என்று திருத்திக் கொள்ளக் கேட்டுக் கொள்கிறேன். மேலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவசாமி கேட்ட வினாவிற்கு "சட்ட திட்டங்கள் திருத்தக் குழு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. சட்ட திட்டங்கள் திருத்தப்பட்ட பின்பு தேர்தல்கள் நிச்சயமாக நடத்தப்படும்" என்று முன்னாள் உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் பதிலளித்தார். இச்சொற்றொடருக்குப்பதிலாக "சட்ட திட்டங்கள் திருத்தப்பட்ட பின்பு தேர்தல்கள் நிச்சயமாக நடத்தப்படும்" என்ற சொற்றொடரை அமைத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.